**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், புதுக்கோட்டை.**
**அமர்வு வழக்கு எண்.56/2020**
**அ.சா.1. தேவி, த/பெ.பாண்டி செல்வம் குறுக்கு விசாரணை**
**நாள் 13.2.2023**

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

**ஆஜர் 1ம்** எதிரி என்கணவரின் சொந்த சித்தப்பா என்றாலும் எனது சின்ன மாமனார் என்றாலும் சரிதான். ஆஜர் 2ம் எதிரி, 1ம் எதிரியின் மகன் என்றாலும், ஆஜர் 3ம் எதிரி 1ம் எதிரியின் மனைவி என்றாலும் சரிதான். ஆஜர் 1ம் எதிரியின் வீட்டிற்கு தென்புறமாக ஆஸ்பெஸ்டாஸ் கூரை போட்ட இடம் எனது என்றாலும் அதை அகற்றினால் தான் எங்களுக்கு வசதியான பாதை அதாவது லாரி, போன்ற வாகனங்கள் வருவதற்கும் போவதற்கும் போதுமான பாதை கிடைக்கும் என்பது சம்பந்தமாக தான் பிரச்சனை என்றால் சரிதான். ஆஸ்பெஸ்டாஸ் சீட்டு வீட்டில் எதிரிகள் குடியிருந்த கொண்டு அதற்கு நேர் வடக்கில் அதாவது எங்கள் வீட்டிற்கு கிழக்கில் எதிரி வீடு கட்டுமானம் செய்து கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். வீடு கட்டி முடித்த பிறகு தான் ஆஸ்பெஸ்டாஸ் கூரை வீட்டிலிருந்த அவர்கள் காலி செய்து கொண்டு போக முடிய் என்றால் சாட்சி, ஆமாம். எதிரிதான் அந்த வீட்டை கட்டி வெள்ளையடித்து விட்டார்கள் என்றும், (என் கணவரை) (உன்னை கொல்லாமல்) நான் காலி செய்து கொண்டு போக மாட்டேன் என்றுசொன்னார்கள் என்று சாட்சி பதில் அளித்துள்ளார். எதிரிகள் ஆஸ்பெஸ்டாஸ் சீடு வீட்டிலிருந்து காலி செய்து கொண்டு அதை அகற்றவில்லை என்பது தான் எங்களுக்கு வருத்தம் என்றால் சாதான். சம்பவத்திற்கு மூல காரணமே பாதை பற்றிய பேச்சு தான் என்றால் சாடசி ஆமாம், பங்கள் வீட்டில் தான் பேசிக் கொண்டிருந்தோம் என்று பதில் அளிக்கிறார். முதலில் என் கணவர் தான் மருத்துவமனைக்கு சென்று சிகிச்சை எடுத்தக் கொள்ள போனார். பின்னிட்டு தான் எதிரிகள் மருத்துவமனைக்கு சென்றார்கள். எதிரிகள் ஆலங்குடி அரசுமருத்துவமனையலிருந்த புதுக்கோட்டை சென்றார்கள் என்றால் சாட்சி அது பற்றி தெரியவில்லை ஆனால் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் என் கணவருக்காக நாங்கள் அங்கு இருக்கும் வரை எதிரிகளும் அங்கு தான் இருந்தர்கள் என சாட்சி பதில் அளிக்கிறார். முதல் எதிரி 3 மாத காலங்கள் புதக்கோட்டை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார் என்றால் சாட்சி ஒரு மாதம் மட்டுமே முதலரல எதிரி சிகிச்சை எடுத்துக் கொண்டுள்ளார். அவருக்கு அந்த அளவுக்கு பாதிப்பு எதுவும் இல்லை என பதில் அறிக்கிறார். முதல் எதிரிக்கு இடது கை ஒடிந்து தொங்கியது என்றால் சாட்சி இல்லை பாதிப்பு என் புருஉஷனுக்கு தான் எனகண்ணீா விட்டு அழுது சாட்சியம் அளிக்கிறார்,. 2,3, எதிரிகள் ஆலங்குடி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக் கொண்டு பின்னிட்டு புதுக்கோட்டை அரசு மருத்துவ மனைக்கு சென்றார்கள் என்றால், அது பற்றி தெரியவில்லை **ஆனால் ஆலங்குடி அரசு மருத்துவமனையில் என் கணவருக்காக நாங்கள் இருக்கும் வரை எதிரிகளும் அங்கு தான் இருந்தர்கள் என சாட்சி பதில் அளிக்கிறார்.** 1ம் எதிரிக்கு கையில் இரண்டு முறை ஆபரேசன் செய்து அவருக்கு கையில் சீல் பிடிக்கும் நிலைக்கு பாதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரியல்ல. நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன்என்றாலும் எதிரிகள் தான் சம்பவத்தால் பாதிக்கப்பட்டு குத்து உயிரும் குலை உயிருமாக கிடந்தார்கள் என்றாலும் முதல் எதிரி 3 மாதம் புதக்கோட்டை அரசுமருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றாலம் மற்ற எதிரிகளும் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்றாலும் அதை மாற்றி தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சாட்சி சரியல்யல 10 நாட்கள் மட்டுமே மருத்துவமனையில் முதல் எதிரி சிகிச்சை எடுத்துக் கொண்டிருக்கலாம் என பதில் அளிக்கிறார். எனது வீடு தெற்கு பார்த்த் வீடு என்றால் சரிதான். எங்களது வீட்டில் கடலை செடி போரரை போட்டு அதை தார் பாய் போட்டு மூடி வைத்திருந்தோம் என்றால் சரிதான். நாங்கள் வளர்க்கும மாடுகளுக்கு உணவாகத்

தான் கடலை செடி போர் போடடிருந்தோம் என்றால் சரிதான். மாடுகளுக்கு கழனி தண்ணீர் கல் தொட்டிகள் வைத்திருநன்தோம் என்றால் சரிதான். என் மாமனாரும் என்கணவரும் எனது கொழுந்தனாருக்கு வீடு கட்டுவது சம்பநதமாக என் வீட்டிற்குள் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். அது சம்பந்தமாக என மாமனாரும் என் கணவரும் பேசிக் கொண்டிருக்கும் போது அவர்களுக்குள் மனஸ்தாபம் ஏற்பட்டு பெரிதாக பேசிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. கடலை செடி போர் போடுவதற்கு அடியில் கம்புகளால் (மரக்கட்டைகளால்) அடித்தளம் போட்டு அதன் மேல் கடலை செடி போர் போடுவோம். என் கணவர் கடலை செடி போரில் போட்ட மரக்கட்டையை உருவிக் கொண்டு முதல் எதிரியை போய் தாக்கினார் என்றாலும், அதில் முதல் எதிரி மயங்கி விழுந்து விட்டார் என்றாலும் அதனால் பயந்து போன என் கணவர் ஓடி வரும் பொழுது எங்கள் வீட்டில் மாடுகளுக்காக வைத்திருந்த கழனி தண்ணீர் கல் தொட்டியில் மோதி என் கணவருக்கு உடம்பில் மற்றும் தலையில் காயமேற்பட்டது என்று சொன்னால் சாட்சி சரியல்ல, என் மாமனாரும், என் கணவரும் எங்கள வீட்டிற்குள் வீடு கட்டுவது சம்பந்தமாக பேசிக் கொண்டிருக்கும்போது அதை வீட்டிற்கு பக்கத்தில் ஒட்டு கேட்டுக் கொண்டிருந்த நீலகண்டன் மூர்த்தி, தேவடியா, புண்டை மகனே என்றுசொல்லி உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என்று சொல்லி என் கணவரின் பின் தலையில் ஒரே அடி அடித்தான் என்றும், இதில் என் கணவர் கழனி தண்ணீர் கல் தொட்டியில் தடுக்கி விழவில்லை என்றும் சாட்சி, சாட்சியம் அளிக்கிறார். எதிரி குடும்பத்திற்கு எதிராக பாதை சம்பந்தமாக இருந்து வரும் பகை காரணமாக நான் உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் கணவரை ஆலங்குடி அரசமருத்தவமனைக்கு அழைத்துச் செல்லும் போது இடையில் அவருக்கு மயக்கம் வந்ததால் பஸ் நிறுத்தத்தில் சற்று நேரம் உட்கார வைத்து பின்பு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சாட்சி சரிதான், நானும் பின்னாலேயே சென்றேன் என்று பதில் அளிக்கிறார் என் கணவருக்கு மது அருந்தும் பழக்கம் இல்லை. என் கணவருக்கு குடி பழக்கம் உண்டு என்றாலும் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது குடிபோதை மயக்கத்தில் வண்டியில் இருந்து கீழே விழுந்து காயமேற்பட்டது என்றால் சரியல்ல. சம்பவம் நடந்தவுடன்உடனடியாக காவல்துறைக்கு தெரியப்படுத்த வேண்டும் என்றால் சாட்சி ஆலங்குடி மருத்துவமனைக்கு அழைத்து சென்ற பிறகே ஆலங்குடி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. என் கணவர் வினோதகன்மருத்துவமனையில் இருந்த போது தான் 27.09.2019 அன்று போலிசார் வந்து விசாரித்ததாக சொல்லி இருக்கிறேன் என்றால் சாட்சி என் கொழுந்தனார் சொன்னதையே தான் நான் சொல்லி இருக்கிறேன். போலிசார் ஆலங்குடி மருத்துவமனைக்கு வந்திருக்கிறார்கள்.ஆலங்குடி மருத்துவமனையில் என் கணவர் மயக்கம் தெளியாமல் இருந்தார். அவசர சிகிச்சை பிரிவில் வைத்திருந்தார்கள். வினோதகன் மருத்துவமனையில் போலிசார் என் கணவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என் கணவர் கையொப்பம் போட்டார். அன்றைய தினம் நான் என் கைக்குழந்தையுடன் வீட்டில் இருந்தேன். இந்த விவரங்களை நான் போலிசார் விசாரித்த போது சொன்னேனா என்றால் சாட்சி இல்லை பதற்றத்தில் என்னால் சொல்ல முடியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். 21.09.2019ல் தான் பிரச்சனை என்றாலும் 27.9.2019 அன்று தான் புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றாலும் சரிதான். வினோதகன் மருத்துவமனையில் என் கணவர் 27.9.2019 அன்று சுய நினைவோடு தான் இருந்தார்.என் கணவர் ஆலங்குடி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் இருந்த போது தான் நிதானமின்றி இருந்தார் என்று எனத முதல் விசாரணையில் சொல்லி இருக்கிறேன். நான் பொய்யான சங்கதிகளை சொல்வதால் தான் ஒன்றுக் கொன்று முரண்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என் சகோதரர் குபேந்திரன் வீடு எனது வீட்டிலிருந்து 20 கி.மீ தொலைவில் உள்ளது. அவரைத் தவிர என் பெற்றோர் வீட்டில் மற்றவர்களும் உள்ளார்கள்.என் சகோதரரிடம் இரு சக்கர வாகனம் உள்ளது. எனது அண்ணன் குபேந்திரன் மற்றும் என்பெற்றோர் வீட்டில் உள்ள மற்றவர்களோ சம்பவம் நடந்த அன்று ஆலங்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் சாட்சி, சம்பவம் கேள்விபட்டுஎன் அண்ணன் குபேந்திரன் நேராக ஆலங்குடி மருத்துவமனைக்கு நேரடியாக

வந்து விட்டார். எதிரிகளால் உண்மையில் என் கணவர் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாக நாங்கள் ஆலங்குடி காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருப்போம் என்றாலும், எதிரிகள் மீது தவறிலலை என்பதால் தான் நாங்கள் உடனடியாக காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சாட்சி சரியல்ல என்றும் ஆலங்குடி போலிசசுக்கு தகவல் சொன்னோம் என்று பதில் அளிக்கிறார். 27.09.2019 அன்று என்கணவர் சுய நினைவுடன் இல்லை என்றாலும் போலிசில் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றாலம் சாட்சி என் கணவர் சுய நினைவோடு இருந்தார். வாக்குமூலம் கொடுத்தார். நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் என் கணவர் சுயநினைவோடு இல்லை என்றாலும் போலிசாரே எழுதிக் கொண்டார்கள் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம், நேரத்தில் அங்கில்லை என்றால் சரியல்ல., நான், அங்கு தான் இருந்தேன். போலிசார் திருச்சி நீரோ மருத்துவமனையில் நான் இருக்கும் போது போலிசார் அங்கு வந்தார்கள். அப்போது நான் பச்சை குழந்தையை கையில் வைத்துக் கொண்டு அழுது கொண்டு இருந்தேன். 10.4.2019ல் என்னை திருச்சி மருந்துவமனை சவக் கிடங்கில் வைத்து விசாரித்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. சவக்கிடங்கு என்பதால் அங்கு என்னை விசாரிக்கவில்லை என்றாலும் காவல் நிலையம் சென்று கையொப்பம் போட்டேன் என்றாலும் சாட்சி நான் காவல் நிலையம்சென்று கையொப்பம் போடவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார். அப்போது எதிரி நீலகண்ட மூர்த்தி அங்கு வந்து பாதை பிரச்சனை 5 வருடமாக இருக்கும் போது நீ எங்கேடா வீடு கட்டறா, உனக்கு பாதை விட முடியாது என்று என் கணவர் பாண்டிசெல்வத்திடம் சொன்னதாகவும், அவர்கள் வீட்டில் இருந்து விட மாட்டேன், என்று மேற்படி நீலகண்ட மூர்த்தி கேட்டதுடன் அவருடன் அவரது அப்பா ஆறுமுகம் அங்கு வந்து அவர்கள் வீட்டில் இருந்து எடுத்து வந்த இரண்டு கட்டைகளைக் கொண்டுவந்தார் என்றும், ஆறுமுகம் கட்டையால் பின் பக்க முதுகிலும் இடுப்பிலும் அடித்தார் என்றும், எதிரிகள் எனது மாமனாரின் வலது பக்க முகத்திலும் அடித்தார்கள் என்றும், என் புருசனை என் கண் முன்னாலே அடித்து கொன்றார்கள் என்றும், இதை நேரில் கண்ணால் பார்த்தேன் என்றும் ஒரு லிட்டர் அளவுக்கு மேல் இரத்தம் அங்கேயே என் கணவரிடமிருந்து வெளியாகி விட்டது என்றும், அவரை தூக்கி எழுப்பிவிடக் கூட ஆள் கிடையாது என்றும், மறு நாள் 22.09.2019ம் தேதியன்று ஆலங்குடி போலிசார் மருத்துவமனைக்கு வந்த என் கணவரை விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள் என்றும், போலிஸ் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால், சாட்சி போலிஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்று பதில் அளிக்கிறார். என்கணவரின் இறப்பிற்கும்,எதிரிகளுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்கணவரின் உடம்பில் ஏற்பட்ட காயங்கள் அவரது கவனக் குறைவால் அவரால் ஏற்படுத்திக் கொண்ட காயங்கள் என்றால் சரியல்ல. என் கணவரும் மாமனாரும் தான் எதிரிகளை கொலை தாக்குதல் செய்தார்கள் என்றால் சரியல்ல. எதிரிகள் உயிருக்கு போராடி பல மருத்துவமனைகளில் சிகிச்சை எடுத்துக் கொண்டார்கள் என்றாலும் அதைப் பொறுத்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தாலும், அந்த புகாரைப் பெற்று வழக்கு பதியாமல் எதிரிகளுக்கு

போலிசார் பெரும் அநீதி இழைத்திருக்கிறார்கள் என்றாலும்அதற்கு நாங்களும் போலிசாருக்கு உடந்தையாக இருந்தோம் என்றால்சரியல்ல. வழக்கு சம்பவத்திற்கு உண்மையான குற்றவாளிகள் இறந்த என் கணவரும் மாமனார் தான் என்றால் சரியல்ல.

*Taken down by me in open court*
*read over to the witnesses and*

*admitted by him/her to be correct.*

*Sessions Judge,*
*Additional District Court,*
*Pudukkottai.*